<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

OS.No. 118/2008 Date: 07.07.2025

PW2- பாபு

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 4 முதல் 11, 14, 15, 23, 24 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் திருச்செங்கோடு அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்தேன். சின்னாக்கவுண்டனூரில் குடியிருந்து கொண்டு பள்ளிக்கு சென்று வந்தேன். தற்போது நான் வசிக்குமிடத்தை விலைக்கு வாங்கி வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால், சரிதான். நான் லாரி ஆபீஸில் மேனேஜராக வேலை செய்கிறேன். 12, 13 பிரதிவாதிகளைப் பற்றியும், அவர்களது குடும்பத்தைப் பற்றியும் எனக்கு தெரியும். அவர்களது சகோதரி கண்ணாயாள் என்பவரை பக்காளியூரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால், எனக்கு தெரியாது. 12, 13 பிரதிவாதிகள் தங்களது பாக சொத்தை யாருக்கு விற்பனை செய்தார்கள் என்றால், எனக்கு தெரியாது. அதனால் வாங்கியவர்களுடன் வாதிகள் பங்கு மாற்றி ஓட்டுகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. 10ம் பிரதிவாதியை எனக்கு தெரியாது, அவரது கணவர் ராஜூவை எனக்கு தெரியாது, ஆனால் கேள்விபட்டுள்ளேன். அவர்களுக்கு எந்த நிலம் பாத்தியப்பட்டது என்றும் எனக்கு தெரியாது. 16ம் பிரதிவாதி குமாரபாளையத்தில் குடியிருக்கிறார். 17ம் பிரதிவாதி ராஜமாணிக்கம் மனைவி சந்திரா சேலத்தில் குடியிருக்கிறார். 18ம் பிரதிவாதி நிர்மலா அரூரில் குடியிருக்கிறார். 20ம் பிரதிவாதி செந்தில்முருகன் மனைவி விஜி வால்ராசம்பாளையத்தில் குடியிருக்கிறார். தாவா சொத்தின் பட்டா எண், சர்வே எண் தெரியாது. என்னுடைய நிலத்தின் பட்டா எண் 3380. தாவா பிரதிவாதிகளில் யார் யார் எந்த பாகத்தை கலந்து ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வாதி ராஜூ 10ம் பிரதிவாதியுடன் பங்கு மாற்றி ஓட்டியுள்ளாரா என்று எனக்கு தெரியாது. மல்லிகா என்பவரை எனக்கு தெரியாது. மழைக்காலத்தில் வருடம்

ஒருமுறையாவது அவரவர் பாகத்தை ஓட்டிக்கொள்வார்கள் என்றால், சரியல்ல. நான் தாவா சொத்தின் அருகில் குடியிருப்பதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. வாதிகள் சொல்லித்தான் நான் சாட்சி சொல்ல வந்தேன். நான் வாதி சொல்லிக்கொடுத்து அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

12, 13, 16 முதல் 22, 26 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

தாவா சொத்தின் வடக்கில் ½ கிலோ மீட்டர் தூரத்தில் என் நிலம் உள்ளது. எனக்கு 16 முதல் 22 பிரதிவாதிகளை தெரியும். அவர்கள் தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளார்கள்.

29 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-

தாவா சொத்துகளின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தில் யார் என்ன வெள்ளாமை செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால், சரியல்ல. 4 ம் பிரதிவாதியை எனக்கு தெரியாது. அவர் வாதியுடன் கூட்டாக தாவா சொத்தை அனுபவிக்கிறாரா என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். தாவா சொத்துககளை கிரையம் வாங்கியது முதல் 24, 27 முதல் 29 பிரதிவாதிகள்தான் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தை அவர்களுக்குண்டான பாகத்தை பிரிக்காமல் கூட்டாக அனுபவித்து வருவது பொய் என்றால், சரியல்ல. வாதிகள் எனக்கு உறவினர்கள் இல்லை, ஆனால் சிறுவயது முதல் பழக்கம். வாதிகள் எனக்கு பழக்கம் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்,சரியல்ல.

ஒப்பம்/- பாபு

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.